## தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை

## அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை

திருத்தணிகை வட்டம், திருவள்ளூர் மாவட்டம் – 631 209.

ந.க.எண் 2053/2021அ1 நாள். 09 .10.2021

## வேலை வாய்ப்பு கோரும் விளம்பர அறிவிப்பு

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணிகை வட்டம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் புதியதாக ஏற்படுத்தப்படவுள்ள முதலுதவி மருத்துவ மையத்திற்கு கீழ்க்கண்ட பதவிகளில் மருத்துவ பணியாளர்களை கொண்டு செயல்பட பணியாளர்கள் ஒப்பந்த ஊதியத்தில் நியமனம் செய்ய தகுதியுள்ள இந்து மதத்தை சார்ந்த நபர்களிடமிருந்து 12 .11.2021 – மாலை 5.45–மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதர விவரங்கள் மற்றும் விண்ணப்ப படிவம் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து கேட்டு தெரிந்தும் பெற்றுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், திருக்கோயிலின் இணையதளத்தில் www.tiruttanigaimurugan.org. and https:/hrce.tn.gov.in என்ற முகவரியில் பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

### மருத்துவ பணியாளர்கள் விவரம்

| வ.எண் | பதவியின் பெயர் மற்றும் எண்ணிக்கை | வயது | தகுதி | ஒப்பந்த ஊதியம் (ஒரு பணியிடத்திற்கு) |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் (Medical Officer) – 2 பதவிகள் | 35 வயது வரை | M.B.B.S (Qualified) Registered under TNMSE | ரூ. 75,000/– |
| 2 | செவிலியர் (Staff Nurse/MLHP) – 2 பதவிகள் | 35 வயது வரை | DGNM (Diploma in General Nursing Midwives) | ரூ. 14,000/– |
| 3 | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் (Multi Purpose Hospital Worker/ Attender – 2 பதவிகள் | 40 வயது வரை | 8-ம் வகுப்பு தேர்ச்சி மற்றும் தமிழில் எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும். | ரூ. 6,000/– |

### நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சார்ந்தவராக இருத்தல் வேண்டும்
2. தொற்று நோய், உடல்நிலை அல்லது மனநிலை குன்றிய குறைபாடு உள்ளவர்கள், நீதிமன்றத்தில் தண்டணை அடைந்தவர்கள்,பட்டகடனை தீர்க்க முடியாதவர்கள் என நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டவர்கள், அரசு பணிகள்,பொது நிறுவனங்கள் மற்றும் வேறு இடங்களில் பணிபுரிந்து தண்டனை காரணமாக பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் இப்பணிக்கு விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.

3. நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.
4. விண்ணப்பதாரர் நல்ல தேக ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.
5. இந்த நேரடி நியமனம் இந்து சமய அறநிலைய சட்ட விதிகளுக்குட்டவையாகும்.
6. இந்த வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடும் தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்கள் 12.11.2021–ம் தேதி மாலை 5.45 மணிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாமல் நிராகரிக்கப்படும்.
7. விண்ணப்பதாரர் ஒவ்வொரு பதவிக்கும் அந்தந்த பதவிக்குரிய கல்வி கூடுதல் தகுதி சான்றுகள் மற்றும் இதர விபரங்களுடன் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.
8. விண்ணப்பம் அனுப்பப்படும் மேலுறையின் மீது கண்டிப்பாக பதவியின் பெயர் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை **இணை ஆணையர்/செயல் அலுவலர் ,அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை ,திருவள்ளூர் மாவட்டம் அஞ்சல் முகவரி 631 209 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**
9. வரப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு தகுதியுள்ள நபர்களுக்கு மட்டுமே நேர்முக தேர்விற்கு அறிவிப்பு அனுப்பப்படும்.
10. விண்ணப்பங்களுடன் அனுப்பப்படும் அனைத்துச் சான்றிதழ்களும் அரசு பதிவு பெற்ற அலுவலர் சான்றொப்பம் பெறப்பட்ட புகைப்பட நகல்களாக மட்டுமே இருக்க வேண்டும். அசல் சான்றிதழ்களை அனுப்ப கூடாது.
11. விண்ணப்பங்களுக்கு கட்டணம் கிடையாது. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது www.tiruttanigaimurugan.org. and https:/hrce.tn.gov.in என்கிற இணையதள முகவரியில் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் பெயரில் உள்ள பக்கத்தில் விண்ணப்பங்கள் ஆன்லைன் மூலம் பதவிறக்கம் செய்து கொள்ளலாம்.
12. விண்ணப்பதாரர் 11.10.2021 அன்று 18–வயது பூர்த்தி அடைந்தவராகவும் வரிசை எண். 1 மற்றும் 2–ல் குறிப்பிட்டுள்ள பணியிடங்களுக்கு 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும். வரிசை எண். 3–ல் குறிப்பிட்டுள்ள பணியிடத்திற்கு 40 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்க வேண்டும்.
13. தெய்வீகத்தாலும், இராஜியாங்கத்தாலும் ஏற்படும் மாற்றங்களுக்கு திருக்கோயில் நிர்வாகம் பொறுப்பல்ல.
14. விண்ணப்பதாரர் மீது குற்றவியல் நடவடிக்கைகள் ஏதும் இல்லாதவராகவும், நன்னடத்தை உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

சி. லட்சுமணன்,எம்.எஸ்சி.,எம்.எல்.,எம்.பி.,
தக்கார்

அ.தி. பரஞ்ஜோதி, எம்.காம், பி.எல்.,
இணை ஆணையர்/செயல் அலுவலர்

**தமிழ்நாடு அரசு – இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருத்தணிகை**

**புகைப்படம்**

**விண்ணப்பிக்கும் பணியிடத்திற்கான பெயர்:**..................................................................

| | | | |
|---|---|---|---|
| 1 | பெயர் (முழுப் பெயர்) | : | |
| 2 | தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் | : | |
| 3 | நிலையான முகவரி<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 4 | 12 இலக்க ஆதார் அட்டை எண் குறிப்பிடவும்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும் ) | : | |
| 5 | பாலினம் (ஆண்/பெண்) | : | |
| 6 | திருமணம் ஆனவரா | : | |
| 7 | சாதி மற்றும் மதம்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 8 | பிறந்த தேதி மற்றும் வயது<br>(வரிசை எண் 1 மற்றும் 2–ற்கு 18 முதல் 35 வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் வரிசை எண் 3–ற்கு 40 வயதிற்கு உட்பட்டவர்கள்– சான்று இணைக்கப்பட வேண்டும் ) | : | |
| 9 | கல்வித் தகுதி<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 9 | தொழில் நுட்ப தகுதிகள் உள்ளிட்ட பிற தகுதிகள்(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 10 | இதர தகுதிகள் ஏதும் இருப்பின் அதன் விவரம்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும் ) | : | |
| 11 | **விண்ணப்பிக்கும் பணியில் முன் அனுபவம இருப்பின் அதன் விபரம்:**<br>பிற நிறுவனங்களில் பணிபுரிந்த அனுபவம்<br>(சான்று இணைக்கப்பட வேண்டும்) | : | |
| 12 | **இந்து சமய அறநிலையத்துறையின் ஆளுகையின் கீழ் உள்ள முதுநிலை அல்லாத திருக்கோயில் பணியாளர் எனில் அதன் விபரம்:**<br>அ) பெயர் | : | |
| | ஆ) தந்தை /கணவர் பெயர் | : | |

| | | | |
|---|---|---|---|
| | இ) பதவி | : | |
| | ஈ) பணியில் சேர்ந்த நாள் | : | |
| | உ) பணிபுரியும் திருக்கோயில் | : | |
| | ஊ) பணிபுரிந்து வருவதற்கான சான்று | : | |
| | எ) நன்னடத்தைச் சான்று | : | |
| 13 | நன்னடத்தைச் சான்று:<br>அ) இறுதியாக பயின்ற பள்ளி/கல்லூரியில் பெறப்பட்ட சான்று நகல் | : | |
| | ஆ) அரசிதழ் பதிவுபெற்ற அதிகாரியிடம் 11.10.2021-க்கு பின்னர் பெறப்பட்ட நன்னடத்தை சான்று<br>(நகல் இணைக்கப்படவேண்டும்) | : | |
| 14 | குற்றவியல் நடவடிக்கை இருப்பின் அதன் விபரம்<br>அ) பதிவு செய்யப்பட்டுள்ளதா ?<br>ஆ) நிலுவையிலுள்ளதா ?<br>இ) தண்டனை வழங்கப்பட்டுள்ளதா ? | : | <br>ஆம்/இல்லை<br>ஆம்/இல்லை<br>ஆம்/இல்லை |
| 15 | தொலைபேசி எண் | : | |
| 16 | கைபேசி எண் | : | |
| 17 | மின்னஞ்சல் முகவரி | : | |

## உறுதி மொழி

____________________ தந்தை/கணவர்/பாதுகாவலர் பெயர் ____________________ ஆகிய நான், இவ்விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள மேற்காணும் அனைத்து தகவல்களும், இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களும் சரியானவை என உறுதி கூறுகின்றேன். எதிர்காலத்தில் மேற்படி தகவல்கள் தவறானவை எனவும், இணைக்கப்பட்ட ஆவணங்கள் போலியானவை எனவும் தெரியவந்தால். என்மீது திருக்கோயில் நிர்வாகத்தால் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி பணி நீக்கம் செய்யவும், குற்றவியல் நடவடிக்கைகளுக்கு கட்டுப்படவும் சம்மதித்து உறுதி அளிக்கிறேன்.

நாள் : விண்ணப்பதாரர் கையொப்பம்

இடம் :